மாபெரும் அருளாளன் அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால்

## ஸவ்ம் (நோன்பு) என்பதன் அர்த்தம்

மொழி வழக்கில்: தடுத்துக்கொள்ளல் என்பதாகும்.
மார்க்க வழக்கில்: ஃபஜ்ர் சாதிக்கிலிருந்து சூரியன் மறையும் வரை உணவையும் குடிபாணத்தையும் ஏனைய நோன்பை முறிப்பவையையும் தடுத்துக் கொள்வதன் மூலம் அல்லாஹ்வை வணங்குதல்.

## நோன்பின் ருகுன்கள் (அத்தியவசிய விடயங்கள்)

1- நிய்யத் (எண்ணம்)
2- நோன்பை முறிக்கும் விடயங்களை தவிர்த்தல்

## நோன்பின் நிய்யத்களின் வகைகள்

1- பர்ளான நோன்பின் நிய்யத்: பர்லான நோன்புக்கு கட்டாயமாக இரவில் அதாவது பஜ்ருக்கு முன்னால் நிய்யத் வைக்கப்பட வேண்டும். (நோன்பு பிடிக்கப் போகிறேன் என்ற எண்ணம் பஜ்ருக்கு முன்னரே வர வேண்டும்), (ரமலான்) மாதத்தின் ஆரம்பத்தில் நிய்யத்து வைத்தால் (அதாவது இந்த மாதம் நோன்பு பிடிக்கப் போகிறேன் என்ற எண்ணம் ஏற்பட்டால்) போதுமானது. நிய்யத் வர வேண்டிய இடம் உள்ளமே; அதனை நாவினால் மொழிவது பித்அத் - மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்டதாகும்.
2- நபிலான (உபரியான) நோன்பின் நிய்யத்: நோன்பை முறிக்கும் எந்த ஒரு காரியத்தையும் பஜ்ரில் இருந்து செய்யாமலிருந்தால் நாளின் எந்த நேரத்திலும் நிய்யத்தை வைக்க முடியும். ஆனால் நிய்யத்து வைத்த நேரத்திலிருந்து தான் கூலி-நன்மை கணக்கிடப்படும்.

## நோன்பின் வகைகள்

1- கட்டாயமான நோன்பு -ரமலான், கப்பாரஹ் (தண்டப் பரிகார) நோன்புகள், நேர்ச்சை நோன்புகள்-
2- நபிலான-உபரியான நோன்புகள்

## ரமலான் நோன்பு கட்டாயமாவதற்கான நிபந்தனைகள்

1- முஸ்லிமாக இருத்தல்
2- புத்தி சுவாதீனம்
3- பருவ வயதை அடைதல் -பிரித்தறியும் பருவத்தை அடையும் சிறுவர்களும் நோன்பு பிடிக்க ஆர்வமூட்ட படுவர். பொறுப்பாளிகள் அவர்களுக்கு ஏவுவார்கள்-.
4- ஊரில் தங்கி இருத்தல் - அதாவது பிரயாணத்தில் இருப்பவர் நோன்பு நோற்பது கட்டாயமில்லை. (பிரயாணம் முடிந்த பின்னர் விடுபட்ட நோன்புகளை நோற்றுக் கொள்ளவேண்டும்). எனினும் சிரமம் இல்லாவிடின் அவர் நோன்பு நோற்றுக் கொள்வதே ஏற்றமானது. காரணம் நபியவர்கள் அவ்வாறு செய்து இருக்கிறார்கள்; விரைவாக பொறுப்பு நிறைவேற்றப்பட்டு விடுகிறது; ஏவல் விளக்கல்களுக்குட்பட்ட மனிதனுக்கு இலகுவாகவும் அமைந்திருக்கிறது; மேலும் இம்மாதத்தின் சிறப்பை அடைந்து கொள்ளவும் முடியும்.
5- ஆரோக்கியமாக இருத்தல்
6- மாதவிடாய் மற்றும் குழந்தை பெற்ற பிறகு ஏற்படும் இரத்தப்போக்கிலிருந்து விடுபட்டிருத்தல்.



## ரமலான் நோன்பு காலத்தில் நோய்வாய்ப்படுதல்

இது இரு வகைப்படும்: 1- குணமடைவதை எதிர்பார்க்க முடியாத நோய். நோன்பு நோற்க முடியாத முதியவரும் இதில் இணைக்கப்படுவர். இவ்வாறானவர்களுக்கு நோன்பு கட்டாயமில்லை. எனினும் ஒரு நோன்பை விடுவதற்குப் பகரமாக ஒரு ஏழைக்கு உணவளித்தல் என்ற அடிப்படையில் உணவளிக்க வேண்டும். விடுபட்ட நோன்புகளின் எண்ணிக்கையின் அளவுக்கு ஏழைகளை அழைத்து இரவு அல்லது பகல் உணவளிக்க முடியும், அல்லது ஒரு ஏழைக்கு கால் ஸாஃ நபவீ உணவுப் பொருள் (உ+ம்: நல்ல கோதுமையில் 510 கிராம்) என்ற அடிப்படையில் அந்நாட்களின் எண்ணிக்கைக்கேற்ப ஏழைகளுக்கு உணவை பகிர்ந்து அளிக்கவும் முடியும். எனினும் அதனுடன் சேர்த்து குழம்பு செய்துகொள்வதற்கான இறைச்சி அல்லது வெண்ணையை கொடுப்பது நல்லது.
2- குணமடையும் என்று எதிர்பார்க்கப்படும் நோய். இதனால் நோன்பு நோற்பதும் சிரமமாகவும் இருத்தல். இதில் மாதவிடாய் ஏற்பட்ட பெண், குழந்தை பெற்றதால் ஏற்படும் இரத்தப் போக்குள்ள பெண், பாலூட்டும் தாய், பிரயாணி ஆகியோரும் இணைத்துக் கொள்ளப்படுவர். இந்நிலையில் உள்ளவர் குணமடைந்த பிறகு விட்ட நோன்புகளின் எண்ணிக்கை அளவுக்கு வேறு நாட்களில் கழா செய்து கொள்ள வேண்டும். அவர் குணமடைவதற்கு முன்னரே மரணித்துவிட்டால் கடமை நீங்கிவிடும்.

## மாதம் ஆரம்பிப்பதை எவ்வாறு உறுதி செய்து கொள்வது?

ரமலான் மாதத்தின் ஆரம்பம் இரு வகையில் உறுதிசெய்யப்படும்:
1- பிறை காணுதல்.
2- பிறை தென்படாவிட்டால் ஷஃபான் மாதத்தை முப்பது நாட்களாக பூர்த்தி செய்வது.

## நோன்பை முறிக்கும் காரியங்கள்

(அறியாமல் செய்பவர், மறதியாக செய்பவர், நிர்ப்பந்திக்கப்படுபவர் ஆகியோருக்கு பின்வருவனவற்றிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும்)
1- தெரிந்துகொண்டே உண்ணுதல் அல்லது பருகுதல். எவரும் மறதியாக உண்டால் அல்லது பருகினால் அவருடைய நோன்பு முறியாது.
2- உடலுறவு கொள்ளல். நோன்பு நோற்பது கட்டாயமான நிலையில் உள்ளவரால் இது நடந்தால், அவர் கடுமையான தண்டப் பரிகாரம் செய்ய வேண்டும். அதாவது ஒரு அடிமையை உரிமையிட வேண்டும்; அடிமை கிடைக்காவிட்டால் இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்க வேண்டும்; அதுவும் முடியாவிட்டால் அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்.
3- நேரடியாகவோ அல்லது முத்தமிடுதல், அணைத்தல் போன்ற செயல்பாடுகள் மூலமாகவும் இந்திரியத்தை வெளிப்படுத்தல்.
4- உண்ணுதல், பருகுதலுக்கு சமமானவை. உணவுக்குப் பகரமாக கொடுக்கப்படும் இன்ஜக்ஷன் போன்று. ஏனைய இன்ஜக்ஷன்கள் நோன்பை முறிக்காது.



5-ஹிஜாமா மூலம் ரத்தத்தை வெளியேற்றல். பரிசோதனை போன்றதற்காக குறைவான அளவில் இரத்தத்தை வெளியேற்றுவது நோன்பை முறிக்காது.
6- வேண்டுமென்று வாந்தி எடுத்தல்.
7- மாதவிடாய் மற்றும் குழந்தை பெற்ற பின் ஏற்படும் இரத்தப்போக்கு.

## நோன்பின் சுன்னத்துக்கள்

1- ஸஹர் செய்தல்.
2- தாமதித்து ஸஹர் செய்தல்.
3- நோன்பு துறப்பதை அவசரப்படுத்தல்.
4- ருதப் எனும் கனிந்த பேர்த்தம் பழங்களைக் கொண்டு நோன்பை துறத்தல். அவை கிடைக்காவிட்டால் காய்ந்த பழங்களைக் கொண்டு நோன்பு துறத்தல். அவை ஒற்றைப்படையாக இருத்தல். அவையும் கிடைக்காவிட்டால் தண்ணீர் மிடர்களைக் கொண்டு நோன்பை முடித்தல். எதுவும் கிடைக்காவிட்டால் உள்ளத்தினால் நோன்பு துறப்பதாக எண்ணம் கொள்ளுல்.
5-நோன்பு துறக்கும் போதும் நோன்பிருக்கும் நேரத்திலும் துஆ கேட்டல்.
6- அதிகமாக தர்மம் செய்தல்.
7- இரவுத் தொழுகையில் கூடுதல் ஈடுபாடு காட்டுதல்.
8- குர்ஆனை ஓதுதல்.
9- உம்றஹ் செய்தல்.
10- எம்மைத் திட்டியவருடன் சண்டை போடாமல் "நான் நோன்பாளி" என்று கூறி விலகிச் செல்லல்.
11-லைலதுல் கத்ர் இரவை அடைந்து கொள்வதற்கு முயற்சி செய்தல்.
12- கடைசிப் பத்து நாட்களில் இஃதிகாப் இருத்தல்.

## நோன்பு நோற்றிருக்கும் போது வெறுக்கப்பட்டவை

1- உளூவின் போது மிகையாக வாய் கொப்பளிப்பதும் நாசிக்குத் தண்ணீர் செலுத்துவதும்.
2- தேவையில்லாமல் உணவின் சுவையை சுவைப்பது.

## நோன்பு நோற்றிருக்கும் போது அனுமதிக்கப்பட்டவை

1- உமிழ்நீரை விழுங்குதல்.
2- தேவைக்காக உணவின் சுவையை (நாவினால் மாத்திரம்) சுவைத்தல். (அதனை விழுங்கக் கூடாது).
3- குளித்தல்.
4- பல் துலக்குதல்.
5- மனம் பூசுதல்.
6- குளிர் பெற்றுக் கொள்ளல்.

## நோன்பின் போது தடுக்கப்பட்டவை

1- நோன்பாளி காறலை விழுங்குவது ஹராமாகும். எனினும் அது நோன்பை முறிக்காது.
2-முத்தமிட்ட பிறகு இச்சையை கட்டுப்படுத்தமுடியாமல் நோன்பு முறிந்துவிடும் என்ற அச்சமுள்ளவர் முத்தமிடுதல்.
3-தடைசெய்யப்பட்ட அனைத்து பேச்சுக்களும் செயல்களும்.
4- மடமையாகவும் நிதானமின்றியும் நடந்து கொள்ளல்.
5- நோன்பு துறக்காமல் இரண்டு நாட்கள் தொடராக நோன்பு நோற்றித்தல்.

## நஃபிலான - உபரியான நோன்புகள்

1- ரமலான் மாதத்தின் நோன்புகளை பூரண படுத்தியவர் ஷவ்வால் மாதத்தில் ஆறு நாட்கள் நோன்பு நோற்றல். அம்மாதத்தின் இரண்டாவது நாளில் இருந்து தொடர்ந்து நோன்பு நோற்பது ஏற்றமானது.
2- ஹஜ்ஜில் இல்லாதவர் அரபா நோன்பு நோற்றல்.
3- ஆஷூரா, தாஸூஆ (முஹர்ரம் 9, 10) நோன்புகள்.
4- திங்கள், வியாழன் நோன்புகள். அவற்றில் திங்கள் நோன்பே அதிகம் வலியுறுத்தப்பட்டுள்ளது.
5- ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்றல். அவற்றை 13, 14, 15 ஆகிய வெள்ளை நாட்களில் நோறபது சிறந்தது.
6- ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்பது.
7- அல்லாஹ்வின் மாதமான முஹர்ரம் மாதத்தில் நோன்பு நோறபது.
8- துல்ஹஜ் மாதத்தின் முதல் ஒன்பது நாட்களில் நோன்பு நோறபது.
9- ஷஃபான் மாதம் நோன்பு நோற்றல். எனினும் முழு மாதமும் நோன்பு நோறகக் கூடாது.

## மக்ரூஹான (வெறுக்கப்படும்) நோன்புகள்

வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் ஏதாவது ஒரு நாளில் மாத்திரம் நோன்பு நோறபது. ஆனால் காரணம் இருந்தால் அந்நாளில் மாத்திரம் நோன்பு நோறபது வெறுக்கபபட்டதல்ல. உதாரணமாக அறபஹ் நோன்பு அந்த நாளில் வருதல்.

## ஹராமாக்கப்பட்ட நோன்பு

1- குறிப்பாக ரஜப் மாதத்தில் மாத்திரம் நோன்பு நோறறல்.
2- ஷக்குடைய நாளில் (ஷஃபான் 30 இல்) நோன்பு நோற்றல். ஒருவர் வழமையாக நோன்பு நோற்றுவரும் நாளில் ஷக்குடைய நாள் அமைந்தால், அப்போது அவர் அந்நாளில் நோன்பு நோறபது தவறல்ல.
3- பெருநாளில் நோன்பு நோற்றல். (அழ்ஹா, பித்ர்)
4- அய்யாமுத் தஷ்ரீக் (துல்ஹஜ 11, 12, 13) நாட்களில் நோன்பு நோறபது. எனினும் 'ஹதீ' பலிப் பிராணி கிடைக்கப்பெறாத ஹஜ செய்பவர் நோன்பு நோறகலாம்.
5- முழு காலமும் நோன்பு நோற்றல். எனினும் விடுபட்ட நோன்புகளை கழா செய்யும்போது தொடர்ச்சியாக அவற்றை நோறபது விரும்பத்தக்கது. பெருநாள் தினத்திற்கு மறுநாளிலிருந்தே அவற்றை தொடரவது அவசியம். அடுத்த ரமழான் வரை அதனை பிற்படுத்தக்கூடாது. காரணமில்லாமல் இவ்வாறு பிற்படுத்துபவர் மீது தவறிய நோன்பை நோறபதை விட மேலதிகமான எந்தக் கடமையும் இல்லை. ஆனாலும் அவர் பாவம் செய்தவராவார்.

## ஸகாத்துல் பித்ர்

ரமலான் மாதத்தின் கடைசி நாள் சூரியன் மறையும் பொழுது எவர் உயிரோடு முஸ்லிமாக இருந்து, பெருநாள் இரவு மற்றும் அதன் பகல் வேலைகளுக்கு தனக்கும் தன் குடும்பத்துக்கும் தேவையான உணவை விடவும் மற்றும் தன் அடிபபடைத் தேவைகளை விடவும் மேலதிகமாக ஒரு 'ஸாஃ' உணவு இருந்தால் அவர் மீது அது கடமையாகி விடுகிறது. கருவறையில் இருக்கும் சிசுவுக்காகவும் அதனை நிறைவேற்றுவது விரும்பத்தக்கது.



## இதற்கான நோக்கம்

1- வீணான மற்றும் மோசமான வார்த்தைகளிலிருந்து நோன்பாளியை சுத்தப்படுத்துவதற்காகவும்.
2- ஏழைகள் பெருநாள் தினத்தில் யாசிக்காமல் தன்நிறைவு பெறுவதற்காகவும்.

## ஸகாத்துல் பித்ரை கொடுப்பதற்குரிய நேரம்

1-பெருநாள் தினத்திற்கு ஓரிரு நாட்களுக்கு முன்பிருந்து அதனை கொடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் நேரமாகும்.
2- பெருநாள் தினத்தில் பஜ்ருக்குப் பின்னுள்ள நேரம் அதனைக் கொடுப்பதற்கு விரும்பத்தக்க நேரமாகும்.
3-பெருநாள் தொழுகைக்குப் பின்னால் நிறைவேற்றுவதற்காக பிற்படுத்துவது ஹராமாக்கப்பட்டதாகும்.

## கொடுக்க வேண்டிய அளவு

மனிதர்கள் உட்கொள்ளும் ஒரு பிரதான உணவில் இருந்து ஒரு 'ஸாஃ' கொடுக்க வேண்டும். அதற்குப் பகரமாக பணம் கொடுக்க முடியாது. -ஒரு 'ஸாஃ' என்பது
நல்ல கோதுமையில் இரண்டு கிலோகளும் நாற்பது கிராமுமாகும்-

## பெருநாள் தொழுகை

இது ஒவ்வொருவர் மீதும் கட்டாயக் கடமையாகும். இதனை சூரியன் ஒரு ஈட்டிப் பிரமானம் உயர்ந்த பிறகுலிருந்து, அது உசிக்கு வந்து சாயும் (லுஹர் நேரம்) வரையில் தொழ முடியும். தொழுகை தவறி விட்டால் கழா செய்ய முடியாது. அதனை கட்டிடங்களுக்கு வெளியால் திறந்தவெளியில் நிறைவேற்றுவதும், தொழுகைக்கு செல்வதற்கு முன்னால் ஒற்றைப்படையாக சில பேரீச்சம் பழங்களை சாப்பிடுவதும், சுத்தம் செய்து கொள்வதும், மனம் பூசிக் கொள்வதும், இருக்கும் ஆடைகளில் அழகானதை அணிவதும், தொழுகைக்காக ஒரு பாதையால் சென்று வேறு பாதையால் திரும்பி வருவதும் சுன்னாஹ்வாகும். تقبل الله منا ومنكم (தகப்பலல்லாஹு மின்னா வமின்கும்) என்ற வார்த்தையைக் கூறி வாழ்த்து கூறுவது தவறல்ல. (அதன் அர்த்தம்: அல்லாஹ எம்மிடம் இருந்தும் உங்களிடம் இருந்தும் அமல்களை ஏற்றுக் கொள்வானாக). பெருநாள் இரவிலும் தொழுகைகளுக்கு பின்னாலும் சூரியன் மறையும் வரையில் பொதுவாக தக்பீர் கூறுவது சுன்னஹ்வாகும். "அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லல்லாஹு, வல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், வலில்லாஹில் ஹம்த்" என்றும் கூறமுடியும். பெருநாள் தொழுகை: குத்பஹ்வுக்கு முன்னால் இரு ரக்அத்துகள் தொழப்படும். முதல் ரக்அத்தில் தக்பீரதுல் இஹ்ராம் எனும் தொழுகையை ஆரம்பிக்கும் தக்பீருக்குப் பின்னர் ஆறு தக்பீர்கள் மேலதிகமாக கூறப்படும். இரண்டாம் ரக்அத்தில் சுஜூதிலிருந்து எழும்பும் போது கூறப்படும் தக்பீருக்குப் பிறகும் குர்ஆனை ஓதுவதற்கு முன்னரும் ஐந்து தக்பீர்கள் கூறப்படும்.



باللغة التاميلية

# நோன்பு பற்றிய சட்டங்கள்

# فقه الصيام




அஷ்ஷெய்க் Dr. ஹைஸம் ஸர்ஹான்

அல்-மஸ்ஜிதுன்னபவிலுள்ள கலாசாலையின் ஆசிரியர்

هيثم بن محمد جميل سرحان

المدرس بمعهد الحرم بالمسجد النبوي


www.alsarhaan.com